DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 16/2020 |
| Deposition of Witness for | : | P.W.6 |
| Name | : | பிரபு |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 41/2026 |

**(வழக்கின் எதிரி சிறையில் உள்ளார்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 29.01.2026

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது பரமக்குடி ஒட்டப்பாலத்தில் குடியிருந்து கீழப்பள்ளிவாசலில் முடி வெட்டும் சலூன் கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 லோகேஸ்வரன் எனது அக்கா மகன். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.5 ராசு எனது தகப்பனார். அ.சா.3 செந்தில் எனது அண்ணன் ஆவார். கடந்த 23.08.2019 ம் தேதி அன்று திருப்புவனத்தில் உள்ள எனது அப்பா ராசு என்பவரை பார்ப்பதற்காக நான் வந்தேன். எனது அப்பா ராசு திருப்புவனத்தில் கவின் சலூன் கடையில் வேலை பார்த்து வந்தார். அன்றைய தினம் இரவு 9.00 மணியளவில் திருப்புவனத்தில் இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்க் அருகே நானும் எனது தகப்பனாரும் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எனது அக்கா மகன் அ.சா.1 லோகேஸ்வரனும் அவரது நண்பர் அ.சா.2 விக்கி என்பவரும் அருகில் உள்ள பானிபூரி கடையில் பானிபூரி சாப்பிட்டுவிட்டு வந்து கொண்டிருந்தார்கள்.

2. அப்போது எதிரிகள் இருவரும் குடி போதையில் கையில் வாளுடன் வந்து கெட்டவார்த்தையால் அ.சா.1 லோகேஸ்வரனை திட்டி இங்க எங்கடா வந்தீர்கள் என்று கேட்டு எதிரி ஹரிகரன் கையில் வைத்திருந்த வாளால் செத்து தொலைங்கடா என்று சொல்லி அ.சா.1 லோகேஸ்வரனின் கழுத்தில் வெட்ட முயற்சித்தபோது அவர் தனது இடது கையால் தடுத்த அவருக்கு இடது கை மணிக்கட்டில் அந்த வெட்டு விழுந்தது. எதிரி கணேசன் அருவாளால் அ.சா.1 லோகேஸ்வரனின் பிடரிப்பகுதியில் வெட்டினார். அதன்பிறகு அ.சா.1 லோகேஸ்வரன் சத்தம்போட்டவுடன் எதிரிகள் இருவரும் அங்கிருந்து ஓடிவிட்டார்கள்.

3. நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது அ.சா.1 லோகேஸ்வரன் காயத்துடன் வந்தார். நானும் எனது தகப்பனாரும் அ.சா.1 லோகேஸ்வரனிடம் கேட்டபோது நடந்த விபரத்தை சொன்னார். அதன்பிறகு அந்த வழியாக வந்த ஒரு போக்கு ஆட்டோவில் காயம்பட்ட அ.சா.1 லோகேஸ்வரனை திருப்புவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். பின்பு அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு சென்றார். அதன்பிறகு மறுநாள் 24.08.2019 ம் தேதி அ.சா.1 லோகேஸ்வரன் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் இருந்த போது திருப்புவனம் போலிசார் விசாரித்தார்கள். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞருக்கு குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் குறுக்குவிசாரணை செய்யவில்லை.**

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.01.29 10:41:11 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**